பாலியல் வன்முறை வீடியோ வெளியான விவகாரத்தில் நீதி கிடைக்கவில்லை !

பெண் நீதிபதிக்கு பதவி உயர்வு வழங்கக்கூடாது:

குடியரசுத் தலைவர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு பாதிக்கப்பட்ட மலையாள நடிகை கடிதம்!

திருவனந்தபுரம், ஏப்.25-

நீதிமன்றத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பலாத்கார வீடியோ வெளியான விவகாரத்தில் நீதிபதி ஹனி எம். வர்கீசுக்கு பதவி உயர்வு வழங்கக்கூடாது என்று பாதிக்கப்பட்ட மலையாள நடிகை ஜனாதிபதி, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். கடந்த 2017ம் ஆண்டு பிப்ரவரி 17ம் தேதி பிரபல மலையாள நடிகை ஒருவர் படப்பிடிப்புக்காக திருச்சூரில் இருந்து கொச்சிக்கு காரில் சென்று கொண்டிருந்தபோது ஒரு கும்பலால் கொடூரமாக பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவு செய்த கொச்சி போலீசார் பாதிக்கப்பட்ட நடிகையின் முன்னாள் கார் டிரைவரான பல்சர் சுனில்குமார் உள்பட 6 பேரை கைது செய்தனர். மேலும் பலாத்காரத்திற்கு சதித்திட்டம் தீட்டியதாக பிரபல மலையாள முன்னணி நடிகர் திலீப் உள்பட மேலும் 4 பேர் இந்த வழக்கில் கைது செய்யப்பட்டனர். இந்தக் கும்பலைச் சேர்ந்தவர்கள் நடிகையை பலாத்காரம் செய்தபோது அதை செல்போனில் வீடியோ எடுத்தனர்.

போலீசாரின் தீவிர விசாரணையில் இந்தக் கும்பல் பலாத்கார காட்சிகளை ஒரு மெமரி கார்டில் பதிவு செய்து வைத்திருந்தது தெரியவந்தது. அந்த மெமரி கார்டை பின்னர் பல்சர் சுனில்குமாரின் வக்கீலிடமிருந்து போலீசார் கைப்பற்றினர். பின்னர் மெமரி கார்டை போலீசார் விசாரணை நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். சிபிஐ சிறப்பு நீதிமன்ற நீதிபதியாக இருந்த ஹனி எம். வர்கீஸ் இந்த வழக்கில் சிறப்பு நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் நீதி மன்றத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த மெமரி கார்டு திறந்து பார்க்கப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பாக வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட நடிகை எர்ணாகுளம் நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்தார். இந்த சம்பவத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனால் இந்த வழக்கில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கடந்த வருடம் டிசம்பர் 8ம் தேதி இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

பல்சர் சுனில்குமார் உள்பட முதல் 6 குற்றவாளிகளுக்கு 20 வருடம் கடுங்காவல் சிறையும், அபராதமும் விதிக்கப்பட்டது.நடிகர் திலீப் உள்பட 4 பேரும் இந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர். இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி ஹனி எம். வர்கீஸ் உள்பட 5 முதன்மை நீதிபதிகளை கேரள உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்க உயர்நீதிமன்ற கொலீஜியம் ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்திருந்தது.

இது தற்போது ஜனாதிபதியின் பரிசீலனையில் உள்ளது. நீதிபதி ஹனி எம். வர்கீசுக்கு பதவி உயர்வு வழங்கக்கூடாது என்று ஜனாதிபதி, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி, ஒன்றிய உள்துறை, சட்டத்துறை அமைச்சர் மற்றும் கேரள உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு பாதிக்கப்பட்ட நடிகை கடிதம் அனுப்பியுள்ளார். அதில் கூறியிருப்பது: நீதிமன்றத்தில் பாதுகாப்பாக இருந்த மெமரி கார்டை யாரோ திறந்து பார்த்துள்ளனர்.

நீதிமன்றத்தில் பாதுகாப்பாக இருந்த மெமரி கார்டை திறந்து பார்த்தது அதிர்ச்சியளிக்கிறது. இந்த விவகாரத்தில் நீதிபதி ஹனி எம். வர்கீசுக்கும் தொடர்பு இருப்பதாக சந்தேகம் உள்ளது. இதுவரை இந்த வழக்கில் எனக்கு நீதி கிடைக்கவில்லை. எனவே ஹனி எம். வர்கீசுக்கு பதவி உயர்வு வழங்கக்கூடாது. இவ்வாறு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மதச்சார்பற்ற கூட்டணி சார்பில்-

தி.மு.க. அரசு - அடுத்த 5 ஆண்டுகளுக்கும் தொடரும்!

காரைக்குடியில் வாக்களித்தபின் - ப. சிதம்பரம் எம்.பி. பேட்டி!

காரைக்குடி, ஏப்.25-

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே கண்டனூரில் உள்ள சிட்டாள் ஆச்சி பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் நேற்று காலை முதல் நபராக முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் வாக்களித்தார்.

பின்னர், அவர் அளித்த பேட்டி வருமாறு:-

தமிழ்நாட்டில் ஒரு நிலையான அரசு வேண்டும். வளர்ச்சி வேண்டும். மக்கள் நலத் திட்டங்கள் வேண்டும். இந்த மூன்று எதிர்பார்ப்புகள் தான் மாநிலம் முழுவதும் எதிரொலிக்கிறது. இந்த மூன்றையும் கடந்த முறை அளித்த திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அரசு, அடுத்த 5 ஆண்டுகளுக்கும் தொடரும் என்ற நம்பிக்கை உள்ளது.

தமிழ்நாட்டில் வரக்கூடிய அரசுக்கு பட்ஜெட் போடுவதில் எந்தச் சிக்கலும் இருக்காது. அமைச்சர்கள் இருக்கிறார்கள், திறன்மிகுந்த அதிகாரிகள் இருக்கிறார்கள். வரவு செலவு கணக்கு போடும்போது மாநிலத்தின் சொந்த வருவாய், ஒன்றிய அரசின் வருவாய் ஆகிய இரண்டையும் கணக்கில் கொண்டு செயல்பட வேண்டும். இது ஒன்றிய அரசுக்கும் பொருந்தும், மாநில அரசுக்கும் பொருந்தும். ஒரு நிலையான அரசு, வலிமையான அரசு உறுதியான வரவு செலவு அறிக்கையை அளிக்கும். மாநிலத்தின் வளர்ச்சி திட்டப்பணிகளுக்கு அதிகளவு கடன் பெறப்படுகிறதே என்கிறீர்கள்.

ஒன்றிய அரசுக்கு எவ்வளவு கடன் உள்ளது? கடன் பெறுவதில் தப்பில்லை. தமிழ்நாடு மட்டும் கடன் வாங்கவில்லை. அனைத்து நாடுகளும்கடன்வாங்குகின்றன. மாநில அரசின் இலவச திட்டங்கள் குறித்து விமர்சனம் எழுந்துள்ளதே என்கிறீர்கள். இலவச திட்டங்களால் மாநிலத்துக்கு எந்த சிக்கலும் இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் பகுதிகளிலிருந்து

பா.ஜ.க. - அ.தி.மு.க. - த.வெ.க.கட்சியினர் 100 பேர் கழகத்தில் இணைந்தனர்!

கழக வேட்பாளர் மரு.கலை கதிரவன் – பொ.சிவபத்மநாதன் முன்னிலையில்!

தென்காசி.ஏப்.25-

திராவிட மாடல் முதலமைச்சர். கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் நல்லாட்சி மீண்டும் தொடர தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பாவூர்சத்திரம் சுற்று வட்டாரப் பகுதியைச் சேர்ந்த பா.ஜ.க. அ.தி.மு.க.மற்றும் த.வெ.க. ஆகிய கட்சிகளில் இருந்து விலகி தென்காசி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் மரு. கலை கதிரவனுக்கு முழு ஆதரவை தெரிவிக்கும் அடிப்படையில் தென்காசி தெற்கு மாவட்ட அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி தொகுதி கழக வெற்றி வேட்பாளர் மரு.கலை கதிரவன் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவ பத்மநாதன் ஆகியோர் முன்னிலையில் தாமாக முன்வந்து கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

கழக துணை பொது செயலாளரும், மாநிலங்களவை முன்னாள் உறுப்பினருமான அந்தியூர் ப.செல்வராசு தனது வாக்கினை பதிவு செய்தார்.

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் தொகுதியின் வேட்பாளரும் உயர் கல்வித் துறை அமைச்சருமான கோவி.செழியன் சோழபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் தனது வாக்கை செலுத்தினார்.

திருவையாறு சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளரும், தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளருமான துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ கண்டியூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் வாக்கு செலுத்தினார்.

தஞ்சை வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் கும்பகோணம் சட்டமன்ற தொகுதியில் கழக வேட்பாளருமான சாக்கோட்டை க. அன்பழகன் எம்.எல்.ஏ சாக்கோட்டையில் உள்ள பகுத்தறிவு தொடக்கப்பள்ளியில் வாக்களித்தார்.

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் ஆர்.இளங்கோ தொட்டியபட்டி வாக்குச்சாவடியில் தனது வாக்கை செலுத்தினார்.

பெருந்துறை சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் பெருந்துறை ஊராட்சி ஒன்றிய பள்ளியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.

ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளரும் , கோபி சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் என். நல்லசிவம் தனது குடும்பத்துடன் சென்று குள்ளம் பாளையம், அரசு உயர்நிலைப் பள்ளி வாக்குச்சாவடி எண் 129 ல் தன்து வாக்கை பதிவு செய்தார்.

குன்னூர் சட்டமன்ற தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் நீலகிரி மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம்.ராஜ் கொட்டநள்ளி வாக்குச்சாவடியில் தனது வாக்கினை பதிவு செய்து, ஜனநாயக கடமையை நிறைவேற்றினார்.

நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு சட்டமன்ற வேட்பாளர் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச் செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரன் கொக்கராயன்பேட்டை அரசு ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளியில் வாக்குச்சாவடி எண் 324 ல் முதல் வாக்காக தனது வாக்கினை செலுத்தினார்.

கூலூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் ரங்கநாதபுரம் தனியார் பள்ளியில் தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் சட்டமன்ற தொகுதி பம்படையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் கழக சட்டத்திட்ட திருத்த குழு தலைவரும் மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் தனது வாக்கை செலுத்தினார்.

அவிநாசி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் வெ.கோகிலாமணி திருமலைக்கவுண்டன்பாளையம் அரசு தொடக்கப் பள்ளியில் தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.



கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர், கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சபரி கார்த்திகேயன் பெரிய நெகமம் அரசு மேல்நிலைப் பள்ளியில் தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை சட்டமன்ற தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளர் கா. அண்ணாதுரை எம் எல் ஏ மண்ணாங்காடு அரசு தொடக்கப்பள்ளியில் வாக்களித்தார்.

நாமக்கல் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் கே.பி.இராணி நாமக்கல் மாநகராட்சி அழகு நகர் பகுதி அரசு துவக்கப் பள்ளியில் வாக்குச்சாவடி எண் 222 ல் தனது வாக்கினை செலுத்தினார்.

பாபநாசம் சட்டமன்ற தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் வேட்பாளர் ஷாஜகான் ஆடுதுறையில் உள்ள பள்ளியில் வாக்களித்தார்.